உ

சிவமயம்.

அருட்பெருஞ்சோதி

தனிப்பெருங்கருணை.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

# சிதம்பரம்

# இராமலிங்கசுவாமிகள்

# சிரோரத்தினப்பாமாலை

இது

கூடலூர்

ஸ்ரீமான் சிவ துரைசாமிதேசிகர்

அவர்களியற்றியதை

சிதம்பரம்

C.M. நாராயணசாமிசெட்டியார் அவர்களால்

தமது

ஸ்ரீ இராமலிங்கம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

அமரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்: திருமதி சிவகாமி அருணாசலம், சீர்காழி. (1982)

1009



உ

சிவமயம்.

குருஸ்துதி.

கட்டளைக்கலித்துறை.

உத்தரஞான சிதம்பரந்தன்னிடையோங்குகின்ற
சத்தியஞான சபைக்கரசே நின்னற்றுண்மலர்க்கே
முத்தமிழான் மணிமாலையைச்சூட்ட முனின்றருள்வாய்
வித்தக ராமலிங்கேசர மெஞ்ஞான வியன்குருவே.

## நூல்

இரட்டையாசிரிய விருத்தம்.

பூமேவு பொறியுறப் புங்கவன் றிசைமுகப்
புங்கவன் பொன்னுலகிலார்
புங்கவன் புகலரிய சங்கரன் மெஞ்ஞான
போதகன் பூதநாதன்
சேமேவு மெம்பிரான் றம்பிரான் சிவபிரான்
திருவருள தேதிரண்டிச்
செகமெலா முய்யவொரு வடிவாகி வந்தநின்
சீர்த்திதனை யென் சொல்லுகேன்
தூமேவு மறையளந்தறியாச் சொரூபமே
சுகமுதவு நிட்சேபமே
சுத்தாந்தகாரண நற்சித்த பரிபாகருட்
டோய்ந்துநின் றொளிர்தீபமே
தேமேவு முலகுபுகழ் தெய்வ வுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட்பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிகசிரோரத்நமே

மும்மைபெரு தேகமும் தேகமுரு போகமும்
முகுராத்தினுற்ற நகர்போல்
முற்று மாரோபிதமெனத் தள்ளியழிவிலா
முத்தியாவேசமாகி
இம்மையிலநுட்டானமேற் கொண்டுனருள்வழியி
லேசற்றிருக்கவுள்ளே
யெண்ணுகின்றே னென்றனெண்ண மீடேறவே
யிப்போதிரங்கு கண்டாய்
அம்மையுடனப்பனு யரியகுரு தெய்வமா
யாவுமாய் நின்றடியர்தம்
ஆணவக் கோடையதுபோ யொழிய வனுதினமு
மருண்மழைப் பொழியுமுகிலே
செம்மைபெறு முலகு புகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட்பிரகாச வள்ளலெனுமெய்ஞ்ஞான
தேசிக சிரோரத்நமே. 2

மாயையெனு மொருகாடி வந்தெனை மயக்கவிரு
வகையான கன்மமெனுமோர்
மாசுணமிழுக்க மாயாவாத மாகின்ற
வனசரர்கள் பயமுறுத்த
ஆயகுலமென்கிற படுநாய்குரைக்க
வாணவ வேங்கையொன்றடர்ப்ப
ஆசையெனு மொருபேயடிக்க காமியமான
வானையது கடுகடுப்ப
மேயபல் சமயமெனுஞ்சுழல் காற்றடிப்பவதின்
மிகுவவாவென்கின்றதீ
விறைவினிற் கொளுவவாற்ரு தடைந்தேனுனது
விரிமலர்ப்பதமருளுவாய்
தேயமிகு முலகுபுகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுர சிற்சபையில்வாழ்
திருவருட் பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிக சிரோரத்நமே 3

..போதவொழிவதே முத்திநிலை யென்றிந்த
தாரணி யுளோரறிந்தே
சாசுவிதமான சாட்சாத்கார மெய்தவே
தனியருட் குரவனாகி
துற்போதனாதிகள் புறம்போக வானந்த
துரிய துரியா தீதமாந்
தூயவொளிவெளி காட்டி சுகநிலை யிருத்துமுன்
சூழ்ச்சிதனை யென்சொல்லுகேன்
சொற்போதமுங் கடந்தப்பால் விளங்குமெய்த்
துறவினர்கள் கண்ட சுகமே
சுத்த நிற்குண சகிதசத்துவ சொரூபமே
தொலைவிலாச் சோதிமயமே
சிற்போதவுலகுபுகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட்பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிக சிரோரத்நமே 4

நயமேவு குண வயித்தியனொருவனேழையர்கள்
நண்ணுமொரு நோயகலவே
நன்மருந்துதவு மத்தகை போன்றிநாளிலே
நற்கருணை யுடனுவந்தே
பயமேவுமெம்மனோர் பவரோகவினையெலாம்
பரிதிமுன் பனிபோலவே
பாறிடும் வண்ணமுன் பருவருள் மருந்துதவு
பட்சநானென் சொல்லுகேன்
வயமேவு வஜ்ரமணி மலையேயமலையிடை
வயங்குமெய்ஞ்ஞான நிலையே
மாசற்ற கற்பூர தீப வொளியே பிறவி
வகையகலவீசு வளியே
ஜெயமேவு முலகுபுகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுரசிற்சபையில்வாழ்
திருவருட் பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிக சிரோ ரத்நமே 5

பேராசை யென்னுமொரு பேரிருட் கடலினுட்
பிரியாத மனைவி யெனுமோர்
பேரட்டை யொன்றெனைப் பற்ற நற்புத்ராராம்
பீடுபெறு மஸ்ய வினமுந்
தாராளமாய் வந்து கொத்த வல்லினை யெனுஞ்
சலசாம் பற்றியீர்ப்ப
தளராமல் வருகின்ற சுகதுக்க வலைமோத
சஞ்சலப் படுமெனக்கே
யேராளமா மருட்புணை யுதவி பேரின்ப
மென்னு மோர் கரையிலென்னை
யேற்றினு லொழிய யிவ்வேழையே னேறிடுத
லெட்டுணையு மில்லை கண்டாய்
சீராயவுலகு புகழ் தெய்வ வுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட் பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிக சிரோ ரத்நமே 6

வடிவுடைய மடமாதரொடு கூடி வாழ்வதே
வளர் முத்தி வாழ்வதென்றும்
மற்றவர்க ளுரைசெயும் வாக்யமே நான்மறை
வழுத்து மெய் வாக்யமென்றும்
கடியவிழு மலர்மாலை புனையுமவர் வாய்சுவைக்
கண்டதே கண்ட தென்றும்
கருதுமவர் கலவியி லிளைக்காம லுறுகின்ற
கண்யமே கண்ய மென்றும்
திடமிகுத்திடு மவர்கள் செய்கையே யாவினுந்
தேர்ந்த நற் செய்கையென்றுஞ்
சிந்தைதனி லுன்னியே சந்ததமு முழலுமிச்
சிறியனேற் கருள லென்றோ
செடியகலு முலகுபுகழ் தெய்வ வுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட் பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிகசிரோ ரத்நமே 7

வானமது சென்றுவாரிமாந்தி நுண்டுளிகளாய்
மழைபொழிந்தந்நீரையே
வான்கங்கையாக்கியும் மற்றதுவிழுந்தோடி
வாரிதனையடையுமாபோல்
ஞானமொன்றில்லாத தீனனேனுக்கு மெய்ஞ்
ஞானவழிபோதித்துமுன்
னன்மையை மறந்து வருபுன்மைவழிசெல்லுமிந்
நாயினேனுய்தலென்றோ
மோனநிலையுற்றவர்க்கான சஞ்சீவியே
முழுதுணர்ந்தவராவியே
முப்புவனமும் புகழுமப்பிரமசைதன்ய
மூர்த்தியே வெகுசீர்த்தியே
தேனுவளருலகுபுகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுரசிற்சபையில்வாழ்
திருவருட்பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிகசிரோரத்நமே. 8

மாயாப்ரபஞ்சபௌதிகவாழ்கையென்னுமொரு
வாரியில்வழுக்கி வீழ்ந்து
மதியவசமுற்று பாகதிதேடுதற்குரிய
மார்க்கமொன்றறியாமலே
வோயாப் பெருங்கவலை யுற்றொருகணத்தினு
முனைத்துதிசெயாமலுழலும்
வூமனேனுய்யுமொருவழியறிகிலேனதை
யுவந்தெனக்குரைசெய்தருள்வாய்
ஈயாய்ப்பறப்பவர்க்கெட்டாத பிரமமே
யெங்குநிறைகின்ற சிவமே
யிகபரசுகங்கடந்தப்பால் விளங்குமெய்
யின்பமேயின்பமயமே
சேயாருமுலகு புகழ் தெய்வ வுத்தரஞான
சித்திபுர சிற்சபையில் வாழ்
திருவருட்பிரகாசவள்ளலெனுமெஞ்ஞான
தேசிக சிரோரத்நமே 9

உலகநிலையுலகினுள்ளுசிதநிலையுசிதமிகு
முண்மைநிலையுற்றனவெலாம்
வோதாதுணர்ந்துயிர்களேகமொடு தெய்வநிலை
யொன்றென்றறிந்தொழுகவே
இலகுபரிபூரணவகண்டிதாகாரமா
யெழுமருட்சோதிதன்னை
எழுதிரைகணீக்கியே யினிதுறக்காட்டுமு
னியற்கருணையென்சொல்லுகேன்
கல்கமுறுசகலகேவலமற்ற நிலையுற்ற
கண்ணியர்கள் நண்ணுமுறவே
கண்டபோதினுமெடுத்துண்டபோதினுமுட்
கலந்தினிக்கின்ற நறவே
திலகமெனவுலகுபுகழ் தெய்வவுத்தரஞான
சித்திபுர சிற்சபையில்வாழ்
திருவருட்பிரகாச வள்ளலெனு மெய்ஞ்ஞான
தேசிக சிரோரத்நமே 10

மந்தகாமகுரோதலோப
வர்ஜிதா நமோ நம
மந்தகாசவதன திவ்ய
வாசகா நமோ நம
கந்தாதொபாசிகா
கணுதிபா நமோ நம
ககனராதி சேவிதா
கடாட்சிதா நமோ நம
பந்தபாவநாசஞான
பார்த்திபா நமோ நம
பரமயோக சதகா
பராத்மனே நமோ நம
எந்தைராமலிங்கதேசி
கேந்திரா நமோ நம
ஈறிலாதயின்பமே
யெமக்கருள் நமோ நம.

## விருத்தம்.

பொன்னாலே சூழுலகம் புகழுகின்றராமலிங்கபுண்ணிய ஞான, மன்னாலே வாய்மலர்ந்த மன்னருட்பா மாமுறையை மகிழ்வினோடு, சொன்னாலே நாவினிக்குங் கேட்டாலே வுளமினிக்குந் துதித்தபோர்க்கு, முன்னாலே செய்தவினை முற்றொழிந்து கைகூடுமோக்கந்தானே.

எந்நாளுமிறத்தலிலா யிறையவனைப் பொருட்படுத்தியிம்பரெல்லாம், பந்நாளும் படித்ததனுட் பயனறிந்து பரகதியில் பதியும் வண்ணம், இந்நாளில் ராமலிங்கயிறையோனீ வாய்மலர்ந்த யினியபாக்கள், அந்நாளிலிருக்குமெனி லதிசயித்தே யமுதருந்தா ரமரர்தாமே.

வானென்கோவான்றிரட்டுமமுதமென்கோ வழுத்திடுமுக்கனியென்கோமதுரமான, தேனென்கோ தெவிட்டாத சீனியென்கோ செங்கரும்பின் சாறென்கோ திராட்சியென்கோ, வூனென்கோவூனிருக்கு முயிர்தானென்கோ வுயிருடம்பா யோங்குகின்ற வுணர்வுமுற்றுந், தானென்கோ ராமலிங்கத்தலைவானீ சொற்றனியருட்பாவெனும் பொருளின்றன்மைதானே.

தந்தையினுந்தயவுடைய தனிராமலிங்கவருட்டலைவானின்னை, வந்தனைசெய்கின்றவர் வானுலகத்தின்பமெலாம் வலியவெய்தி, இந்திரர்போல் நீண்டிருந்திங்கிறுதிதனிலெவராலு மிசைக்கொணாத, சுந்தரமாம்பெரும் போகந்தோய்ந்திருப்பாரெனிலுன் சீர்சொல்லற்பாற்றே

தாயுரைத்தவார்த்தையினுந்தனிரா மலிங்கவருட்டலே வாமிக்க, நீயுரைத்வார்த்தையென்றே நிதநிதமுஞ்சிந்தித்து நிட்டைகூடி, ஆயுலகச்செயன்மறந்தே யகமொடுங்கியத்துவிதானந்தமென்னுந், தூயவனுபவமடைந்து சுகித்திருப்பாரறிஞரெனிற் சொல்வதென்னே.

ஆரியர்களுரைத்தநெறியத்தனையும் நீயுரைத்த வருட்பாவென்னுஞ், சீரியவோர் நூலதனிற்றிடமாகக் காணுகின்றதிறத்தைநோக்கிப், பேரியனற்பெரியரெலாம்பெரிது வந்துவந்தித்தார்பீழையுற்றப், பூரியர்கணிந்தித்துப்போய் நரகம் புக்கியவம்போகின்றாரே.

அண்டவரைக்கடந்தவரை யகத்தவரைப் புறத்தவரையளவிலேலாப், பிண்டவரைக் கண்டவரைப்பெரியவரை யரியவரைப் பிரமஞானம், விண்டவரைப் பொ, ருள்படுத்தும் வியன் ராமலிங்கவருள்விபுவே நின்னைக் கண்டவரைக் கண்டாலேகலிதீருங் கடிதகலுங்கவலை தானே.

வஞ்சமிலாராமலிங்க வள்ளால்நீவாய்மலர்ந்த செஞ்சொலருட்பாமுறையைத் தெய்வமெனப்பாவித்தும், விஞ்சவதைபூசித்தும் விருப்பமுறவாசித்தும், அஞ்சுபவமேயொழித்தா ரவனியுளாரதிசமே.

கள்ளமிலாராமலிங்க கண்யவருட்பிரகாச, வள்ளலர் வாய்மலர்ந்தமுறை மாமறையென்றறிஞரெலாம், உள்ள படியுரைத்துகந்தா ரோர்புலமுமறியாதார், எள்ளுனசென்றாலதனை யெவர்பொருட்டாயெண்ணுவரே.

அரும்புமலர் காய்கனிபோ லவ்வவருக்கனுபவமாய்,
பெரும்புகழ்சேரருட்பாவாம் பெரியவோர் நூலதனைக்
கரும்புகைக்கும் படியுரைத்திக் காசினியைக்கனிவித்த,
தரும்புகழ் சேரிராமலிங்க தலைவாநின் சதுரென்னே.

## கட்டளைகலித்துறை.

அருகாதசெல்வாருட்பிரகாச ரளந்துவைத்தக்
கருகாத நல்லருட்பாவெனும் நூலைக்கனிவுகொண்டு
பெருகாதரத்தொடு பாடப்படிக்கவெப்பெற்றியரும்
உருகாத தன்மையுண்டோ சொல்லுவீரிவ்வுலகிடையே

பாலடிசிற்கொண்டுமைப்பொன்கலத்திற் பரிந்தருந்தி
மேலடிமெத்தையின்மேலிருந்தாலொருமேன்மையில்லை
ஆலடிவீற்றிருந்தோன் புகழாமருட்பாவிலுள்ள
நாலடிகற்றுணர்ந்தால் வருமே முத்திநாடதுவே.

பொருட்சோதனையுற்ற பூதலத்தென்றும்பொருந்திமிக்க
தெருட்சோதி தெய்வத்திருநிலையாய்ந்திடுஞ் சிந்தையுள்
மருட்சோதனையற்ற ராமலிங்கேந்திர வள்ளலன்றி (ளீர்
அருட்சோதிதெய்வத்தை யார்காட்டினரிவ்வகலிடத்தே

சாத்திரங்கற்றுசமயந்தெரிந்த சற்சங்கமத்தீர்
நேத்திரம்போன்ற வருட்பிரகாசர் நெகிழ்ந்துரைத்த
தோத்திரரூபமதாமருட் பாவைத்தொழுது நிதம்
பார்த்திருந்தாலும் பழவினையாவும் பறந்திடுமே.

பாலிற்கலந்த பழம்போலுருசிக்கும் பாடல்செய்து
மேலிற்கலந்தவர்தம்பாட்டைக்கேட்டுவியத்தலின்றி
டீாலிற்கலந்தவர்தம்பாட்டைக்கேட்டுமகிழ்வதெல்லாந்
தாலிற்கலந்த சுவைவிட்டு திருப்பிகொள் தன்மையதே.

---

## குருஸ்துதி.

விசித்ரவிஸ்வ மாயினம் விகாரம்ருத்யு பஞ்ஜனம்
சரீரரூபவர்ஜிதம்ஸ்வயம் பிரகாசலக்ஷணம்
தனுத்ரயேண சோபிதம் தராதிதத்வதாரிணம்
குரூர்த்தமார்ய ராமலிங்ககோமணிம் நமாம்யஹம்

சிதாத்மதேஜபாஸ்வரம் சிவாநுபூதி ரஞ்சனம்
ஸதாத்மகோடி நாயகம் ஷடாந்தஜ்யோதிபாஸ்கரம்
பதார்த்தசோத நாஸ்ரயம்பவாப்தி சோஷணாகரம்
குரூர்த்தமார்ய ராமலிங்ககோமணிம் நமாம்யஹம்

சராசராத்மரூபகம் ஸதோதயார்க்க சிந்திதம்
க்ஷராக்ஷரத்வயாதிகம் ஸ்நாதநம் புராதநம்
பராபரப்பிரகாசகம் பரோக்ஷபோத வர்ஜிதம்
குரூர்த்தமார்ய ராமலிங்க கோமணிம் நமாம்யஹம்.

வேலூர் நமசிவாயம்பிள்ளை அவர்களால்
பாடப்பெற்றது.

முற்றிற்று.